**செய்தி வெளியீடு எண்: 454** **நாள்: 01.07.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

**2019** ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் **6** மற்றும் **11–**ஆம் தேதியிட்ட மாண்பமை உச்சநீதிமன்ற ஆணைக்கிணங்க மறுசீரமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகியவை நீங்கலாக ஏனைய கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பெற்று புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் **06.01.2020** அன்று தங்களின் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார்கள்.

**2.** புதிதாக மறுசீரமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களுக்கான வார்டு எல்லை வரையறை பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திடீரென்று (COVID-19)கொரோனா என்ற தொற்று நோய் பரவிவருவதால், மத்திய, மாநில அரசுகளால் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு எந்திரம் போர்கால அடிப்படையில் கொரானா நோய் தடுப்பு பணிகள், பாதுகாப்பு பணிகள், மீட்பு மற்றும் நலவாழ்வு பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது. எனவே தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணைகளுக்கிணங்க ஊரக உள்ளாட்சி தேர்தல்களை நடத்த இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது.

**3.** எனவே, புதிதாக மறுசீரமைக்கப்பட்ட காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி

மற்றும் தென்காசி மாவட்டத்திலுள்ள கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி, தனிஅலுவலர்களின் பதவிக்காலமானது 2020 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் தேதியன்று முடிவடைகிறது. தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பதற்காக, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 261–A ஆம் பிரிவினை திருத்துவதென அரசானது முடிவு செய்துள்ளது.

4. அதற்கிணங்கிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தினை 30.06.2020 அன்று பிறப்பித்துள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**